தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

நந்தன, பங்குனி 26, திருவள்ளுவர் ஆண்டு – 2044

2013 ஏப்ரல் 8, திங்கட்கிழமை

சென்னை, புனித ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்டமன்றப் பேரவை மண்டபத்தில் மாண்புமிகு பேரவைத் தலைவர் **திரு. ப. தனபால்** *அவர்கள் தலைமையில் காலை 10–00 மணியளவில் பேரவை கூடியது.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்:

"பகுத்துஉண்டு பல்லுயிர் ஓம்புதல் நூலோர்
தொகுத்தவற்றுள் எல்லாம் தலை."

கிடைத்த உணவைப் பலருக்கும் கொடுத்து, தானும் உண்டு, அனைத்து உயிர்களையும் காப்பாற்றுதல் நீதிநூல்கள் கூறுகின்ற அறங்கள் அனைத்திலும் மிக உயர்ந்ததாகும்.

1. வினாக்கள்–விடைகள்

உடுக்குறியிட்ட வினாக்கள்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினாக்கள்–விடைகள். வினா வரிசை எண் 165, மாண்புமிகு உறுப்பினர் திரு. மு.வீ. கருப்பையா, மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள்.*

165—

மின் வசதி

***19138—திரு. மு.வீ. கருப்பையா:**

மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சோழவந்தான் தொகுதி, விராலிப்பட்டி ஊராட்சி, சிறுமலை மீனாட்சிபுரத்திற்கு மின் இணைப்பு வழங்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. நத்தம் ஆர். விசுவநாதன், மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) ஆம். சோழவந்தான் தொகுதி, விராலிப்பட்டி ஊராட்சிக்குட்பட்ட மீனாட்சிபுரம் மக்களுக்கு மின் வசதிகள் செய்து கொடுக்க திண்டுக்கல் மின் பகிர்மான வட்டம், சிறுமலையில் அகஸ்தியர்புரம் கிராமத்திலிருந்து விரிவாக்கம் செய்யும் பணிக்கான கருத்துரு ரூ.40 இலட்சம் மதிப்பீட்டில் தயார் செய்யப்பட்டுள்ளது. மின் பாதை அமைப்பதற்கான இடம் வனப் பகுதி என்பதால் வனத் துறை மற்றும் சூற்றுச்சூழல் பாதுகாப்புத் துறையின் அனுமதி பெற்றவுடன் மதிப்பீடு ஒப்புதல் பெறப்பட்டு, பணிகள் துவக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. மு.வீ. கருப்பையா அவர்கள்.

திரு. மு.வீ. கருப்பையா: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நாடு சுதந்திரம் அடைந்து 65 ஆண்டுகள் நிறைவடைந்த நிலையிலும் மக்களுக்கான அடிப்படை வசதிகளைக்கூட நிறைவேற்றாமல் மத்தியிலே ஆளும் அரசு, 55 ஆண்டுகளுக்கு மேலாக குடும்ப ஆட்சியைப் புரிந்துகொண்டிருக்கிறது. இன்னும் சில மாதங்களில் இந்த நாடு எப்படி இருக்கவேண்டுமென இந்தியாவினுடைய ஒட்டுமொத்த மக்களும் நிர்ணயிக்கக்கூடிய நிலை உருவாகும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மதுரை மாவட்டம், சோழவந்தான் தொகுதி, விராலிப்பட்டி ஊராட்சிக்குட்பட்ட மீனாட்சிபுரத்தில் மொத்த வாக்காளர்கள் சுமார் 160 பேர். மொத்த குடியிருப்புகள் 120. விவசாய நிலங்கள் சுமார் 1,200 ஏக்கர். அந்தக் கிராம மக்கள் விராலிப்பட்டியிலிருந்து வனத் துறை பாதை வழியாகச் செல்லவேண்டுமென்றால் சுமார் 20 கி.மீ. தூரம் செல்லவேண்டும்.

திண்டுக்கல் மாவட்டம், சிறுமலை முதல் மீனாட்சிபுரம் வரை மின் கம்பம் அமைக்க வெறும் 7 கி.மீ. தொலைவே உள்ளது. தமிழர்களுடைய காவல் தெய்வம் மதிப்புமிகு அம்மா அவர்களுடைய நல்லாட்சியில், திண்டுக்கல் மாவட்டச் செயலாளரும், மின்சாரத் துறை அமைச்சர் அவர்களும், அந்தப்

2013 ஏப்ரல் 8]

பகுதி மக்களுடைய வாழ்வாதாரத்தை அறிந்தவர்கள். சிறுமலை முதல் மீனாட்சிபுரம் வரை மின் இணைப்பு வழங்க மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா என்பதைத் தங்கள்வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத்துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. நத்தம் ஆர். விசுவநாதன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மதுரை மாவட்டம், சோழவந்தான் தொகுதி, விராலிப்பட்டி ஊராட்சிக்குட்பட்ட மீனாட்சிபுரம் கிராமம், சிறுமலைப் பகுதி, மலைப் பகுதியில் இருக்கிறது. ஏற்கெனவே, மின்வசதி பெற்றிருக்கின்ற விராலிப்பட்டி கிராமத்திலிருந்து மீனாட்சிபுரம் கிராமம் 6 கி.மீ. தொலைவில் உள்ளது. அந்தப் பகுதி 6 கி.மீ. அடர்ந்த வனப் பகுதியில் இருப்பதால் அங்கே பாதை வசதி அமைப்பதற்கு வேண்டிய சூழ்நிலைகள் இல்லை.

முற்பகல் 10—05

இப்போது அனைத்து கிராமங்களுக்கும் மின் இணைப்பு கொடுக்கவேண்டுமென்று மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசின் கொள்கையின்படி, மாண்புமிகு அம்மா அவர்களுடைய உத்தரவின்படி, மதுரை மாவட்டத்திலிருந்து அதை கொடுக்கமுடியவில்லையென்று சொன்னாலும்கூட, திண்டுக்கல் பகிர்மான வட்டத்திலிருந்து அந்தக் கிராமத்திற்கு மின் இணைப்பு கொடுப்பதற்கு வேண்டிய நடவடிக்கைகளை மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு எடுத்து வருகிறது. எனது நத்தம் தொகுதிக்குட்பட்ட சிறுமலைப் பகுதியிலிருந்துதான் அகஸ்தியர்புரம் என்ற கிராமம் இருக்கிறது. அது அடர்ந்த காட்டுப் பகுதி, மலைப் பகுதியிலேதான் இருக்கிறது. அந்த மலைப் பகுதியிலிருந்து மீனாட்சிபுரம் கிராமம் 10.6 கிலோ மீட்டர் தூரத்தில் இருக்கிறது. மதுரையிலிருந்து வந்தால் 6 கிலோ மீட்டர்தான் தூரம். ஆனால், இங்கிருந்து சென்றால் 10.6 கிலோ மீட்டர் தூரம். இருந்தாலும்கூட, 6 கிலோ மீட்டர் தூரத்தில் அமைப்பது கடினமாக இருக்கிறது. 10.6 கிலோ மீட்டர் தூரம், சற்றுக் கூடுதல் தொலைவாக இருந்தாலும்கூட, இந்த வழியைத் தேர்வு செய்து, இப்பொழுது அதிலே மின் பாதை அமைப்பதற்கு வேண்டிய மதிப்பீடுகள் எல்லாம் தயார் செய்யப்பட்டிருக்கின்றன. அந்தக் கிராமத்திற்கு, 40 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில், ஏறத்தாழ

177 மின் கம்பங்கள் தேவை என்று கண்டறியப்பட்டிருக்கிறது. அந்தக் கிராமம் சிறிய கிராமம்தான் என்றாலும்கூட, அதற்கு மின் இணைப்பு கொடுப்பதற்கு வேண்டிய அனைத்து மதிப்பீடுகளும் தயார் செய்யப்பட்டிருக்கின்றன. மத்திய அரசினுடைய வனம் மற்றும் சுற்றுச்சூழல் துறையினுடைய அனுமதி கோரப்பட்டிருக்கிறது. அவர்களின் அனுமதி கிடைத்தவுடன், உடனடியாக திண்டுக்கல் மின் பகிர்மான வட்டத்திலிருந்தே அகஸ்தியர்புரம் கிராமத்திலிருந்து மீனாட்சிபுரம் கிராமத்திற்கு மின் பாதை அமைக்கின்ற பணிகளை மாண்புமிகு அம்மாவினுடைய அரசு விரைவாக மேற்கொள்ளும் என்பதைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. மு.வீ. கருப்பையா அவர்கள்.

திரு. மு.வீ. கருப்பையா: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள், "சீக்கிரம் செய்து கொடுப்பேன்" என்று சொன்னதற்காக நன்றி. மேலும், அந்தப் பணியினை விரைந்து செய்து கொடுக்க வேண்டுமாய் மீண்டும் கேட்டுக்கொள்கிறேன். அதேபோல, சோழவந்தான் தொகுதிக்குட்பட்ட 15 பி. மேட்டுப்பட்டியில் முத்துக்கருப்பண்ண கண்மாய் என்ற ஓர் ஊரணி உள்ளது. அந்தப் பகுதி மக்களுடைய நீண்டநாள் கோரிக்கை அந்தப் பகுதியிலே ஒரு துணை மின் நிலையம் அமைக்க வேண்டும் என்பதுதான். அதையும் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கவனத்தில் எடுத்துக்கொண்டு செயல்படுத்துவார்களா என்று தங்கள்வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. நத்தம் ஆர். விசுவநாதன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய மாநில அரசினால் காலதாமதம் ஏற்படவில்லை. மத்திய அரசினுடைய வனம் மற்றும் சுற்றுச்சூழல் துறையினுடைய அனுமதியைப் பெறுவதிலேதான் காலதாமதம் ஏற்படுகிறது. இருந்தாலும், தமிழ்நாடு மின்சார வாரியம், மத்திய அரசின் வனம் மற்றும் சுற்றுச்சூழல் துறையினுடைய அனுமதியைப் பெறுவதற்காகத் தொடர் முயற்சியை எடுத்து வருகிறது. அனுமதி கிடைத்தவுடன் உடனடியாக அந்தப் பணிகள்

மேற்கொள்ளப்படும். இதைத் தவிர மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் இதர பகுதிகளுக்காக வைத்திருக்கின்ற கோரிக்கைகளையும் மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு பரிவுடன் பரிசீலிக்கும் என்பதை அன்புடன் தெரிவித்துக்கொள்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 166, மாண்புமிகு உறுப்பினர் திரு. எம். ஆறுமுகம், மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள்.*

166—

ஊரகக் குடிநீர்த் திட்டம்

***19861—திரு. எம். ஆறுமுகம்:**

மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

வால்பாறை தொகுதி, ஆனைமலை ஒன்றியம், கம்மாலப்பட்டி மற்றும் 22 கிராமங்களுக்கான குடிநீர்த் திட்டத்தை மேம்படுத்திட அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு திரு. கே.பி. முனுசாமி, நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தங்களின் அனுமதியுடன் திருத்தியவிடையைத் அளிக்கிறேன்..

வால்பாறை தொகுதி, ஆனைமலை ஒன்றியம், கம்மாலப்பட்டி மற்றும் 22 கிராமங்களில் வாழும் மக்கள் பயன்பெறும் வகையில் ஆழியாறு ஆற்றினை நீராதாரமாகக் கொண்டு கம்மாலப்பட்டி கூட்டுக் குடிநீர்த் திட்டம் தற்போது செயல்பட்டு வருகிறது. இத்திட்டம், அதனுடைய வடிவமைப்பு காலம் முடிந்துவிட்டபடியால், பல்வேறு கட்டமைப்புகளிலுள்ள பழுதுகள் தற்பொழுது சீரமைக்கப்பட வேண்டும். தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தால் பழுதுநீக்கம் மற்றும் புனரமைப்புப் பணிகளை மேற்கொள்ள 120 இலட்சம் ரூபாய் செலவாகும் என மதிப்பீடு செய்யப்பட்டுள்ளது. மேலும், கம்மாலப்பட்டி கூட்டுக் குடிநீர்த் திட்டத்தைச் செயல்படுத்த அமைக்கப்பட்ட திட்டக் குழு,